வட.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 19/2018

எனது இல.NP/07/10/02/129
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
யாழ்ப்பாணம்.
*02.07.2018*

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
**வடக்கு மாகாணம்.**

## மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையில் தரம் III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2012 (II) (2018)

***2013.12.11*** ஆந் திகதிய ***1840/ 34*** ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பினைத் தழுவித் தயாரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 8 மற்றும் பந்தி 15 ஆகியவற்றினது ஏற்பாடுகள், இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்பு 4 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக மாகாண அரச முகாமை உதவியாளர் சேவையில் தரம் IIIஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் **2018 புரட்டாதி மாதம்** நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*02.* புதிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு முன்பு நடைமுறையில் இருந்த சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக தரம்III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையினைப் பூர்த்திசெய்திராத ஆனால் (1) அலுவலக முறைமைகள் (2) கணக்கீட்டு முறைமைகள் (3) கணினிப் பரீட்சை என பெயர் குறிப்பிடப்பட்ட இப்பரீட்சையில் ஒரு பாடத்தை அல்லது அவற்றில் சிலவற்றை சித்தியெய்தி விலக்களிப்புப் பெற்றுள்ள அலுவலர்கள் பாடத்துக்குப் பாடம் என்ற அடிப்படையில் இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் IIIஇலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் உரிய பாடங்களிலிருந்து விலக்களிப்புப் பெறுதல் வேண்டும்.

03. மாகாண அரச முகாமை உதவியாளர் சேவையில் தரம் IIIஇல் உள்ள அலுவலர்களுக்காக இப்பரீட்சை யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். இந்நகரங்களுக்கு ஏற்புடையதான நகர இலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. போதிய அளவிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காமை அல்லது வேறு காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச் செய்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்பப்படி அந்நிலையத்தைத் தீர்மானிக்கும் தற்றுணிவு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும். விண்ணப்பம் செய்துள்ள நகரம் / நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| ***நகரம்*** | | ***நகர இலக்கம்*** |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | - | *10* |
| மன்னார் | - | *11* |
| முல்லைத்தீவு | - | *12* |
| கிளிநொச்சி | - | *25* |

04(i) இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்குப் பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

(ii) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதந்துரைக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

(iii) இப்பரீட்சை தொடர்பாக மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களால் விதிக்கப்படும் சகல தீர்மானங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

05. ***தகைமைகள் :*** மாகாண அரச முகாமை உதவியாளர் சேவையில் தரம் IIIஇன் நியமனமொன்றைப் பெற்றுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர். தரம் IIIஇற்கான நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள் இப்பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

06. இப்பரீட்சைக்கான விண்ணப்பம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். இம்மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக **2018.07.23**ஆம் திகதி அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியவாறு **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393 / 48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கின்ற விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்களும் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும்.

07. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:-** பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

08. **விண்ணப்பங்கள் :-** இல *1* முதல் *4* வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும் மிகுதி அடுத்த பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் A4 அளவினதான ஒரு தாளில் விண்ணப்பமானது தயார் செய்தல் வேண்டும். விண்ணப்பம் கணினியில் தயாரித்துக்கொள்ளப்படுமாயின் இவ்விண்ணப்பம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்து மூலம் சரியாகவும், தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது இத்துடன் உள்ள படிவத்திற்கேற்ப தயார் செய்தல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப் படிவத்தை மட்டுமே அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியை அனுப்பிவைத்தலாகாது என அறிவித்துக் கொள்ளப்படுகிறது. மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை **தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும்** குறிப்பிடவும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதன் பின்னரான அமர்வுகளின் போது அலுவலர்கள் ஒரே அமர்வில் முழுப்பரீட்சைக்கும் தோற்றுவதாயின் ரூபா 500/-யும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 250/-யும் விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகமொன்றிலும் "**வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர்**" அவர்களின் "***3401***" என்ற வைப்புக் கணக்கிற்கு செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்று விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியைத் விண்ணப்பதாரி தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் முடியாது.

09. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டையும் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தங்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பான அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சைத் திணைக்களம் பத்திரிகைகளில் வெளியிடும். அறிவிப்பு வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். தங்களிடம் இருக்கும் விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருந்தால் உரிய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி, உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், பரீட்சையின் பெயரையும் மற்றும் தொலைநகல் மூலம் அனுமதி அட்டையை உங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ள கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி விசாரிப்பது அதிக பயனுள்ளதாகும்.

பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர்கள் கையொப்பம் உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு:-**

விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதியட்டை அனுப்புதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதலாகாது.

10. பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் அனுப்பிவைக்கப்பட்ட பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்ற அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் எவையும் வழங்கப்படமாட்டாது.

11. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் உரிய சேவைக்கான நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் மூன்று வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் சேர்ந்த அலுவலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. உத்தியோத்தர்கள் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் தோற்றலாம். ஆயினும் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

13. அரச கரும மொழிக் கொள்கையின் குறிக்கோள்களுக்கு அமைய சகல அலுவலர்களும் தமது விண்ணப்பங்களை அரசகரும மொழியில் தயார்படுத்த வேண்டியதுடன் அம்மொழியினாலேயே அதை நிரப்பவும் வேண்டும்.

14. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களுக்கு அனுப்பப்படும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளினது பெறுபேறுகளும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் அனுப்பி வைக்கப்படும்.

15. ***பரீட்சைத் திட்டம் :-*** பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் உள்ளடக்கிய எழுத்து மூலப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும்.

| | பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக முறைகள் | 01 | 100 | 2 மணித்தியாலங்கள் |
| 2. | கணக்கீட்டு முறைகள் | 02 | 100 | 2 மணித்தியாலங்கள் |
| 3. | கணினிப் பரீட்சை | 03 | 100 | $1^1/_2$ மணத்தியாலங்கள் |

**15.1 அலுவலக முறைமைகள் (பாட இலக்கம் 01) :-**

அரச அலுவலகங்களில் கையாளப்படுகின்ற அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படை அறிவும், அவ்வறிவினை செய்முறையாக பயன்படுத்தும் திறனும், கடமையுடன் தொடர்புடைய ஆவணங்களை நன்கு புரிந்துகொண்டு தெளிவாக சுருங்கிய குறிப்புகளின் மூலம் தமது கருத்துக்களை/ ஆய்வுகளை சமர்ப்பிக்கும் ஆற்றலும் விதிக்கப்பட்ட கட்டளையின் கீழ் கடிதமொன்றை வரையும் திறனும் சோதிக்கப்படும். இவ்வினாத்தாள் பின்வரும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

**பகுதி I** – சுருக்க விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களைக் கொண்டமைந்திருக்கும் குறித்த வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும் என்பதுடன் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ***(25 புள்ளிகள்)***

**பகுதி II** – அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் ஏதாவது மூன்றிற்கு மட்டும் விடையளித்தல் வேண்டும். ***(75 புள்ளிகள்)***

**15.2 கணக்கீட்டு முறைமைகள் (பாட இலக்கம் 02) :-**

அரச அலுவலகங்களில் கையாளப்பட்டு வருகின்ற ஆரம்ப கணக்குகள் மற்றும் கட்டுப்பாட்டு புத்தகங்களின் செயற்பாடு பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் அளவிட இதனால் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வினாத்தாள் பின்வரும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

**பகுதி I** – சுருக்க விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களைக் கொண்டமைந்திருக்கும் குறித்த வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும் என்பதுடன் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ***(25 புள்ளிகள்)***

**பகுதி II** – அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் ஏதாவது மூன்றிற்கு மட்டும் விடையளித்தல் வேண்டும். ***(75 புள்ளிகள்)***

***15.3*** **கணினிப் பரீட்சை (பாட இலக்கம் 03) :-**
பரீட்சார்த்தி பின்வரும் ஆற்றல்களைக் கொண்டுள்ளாரா என சோதிப்பது இப்பரீட்சையின் நோக்கமாகும்.

I. தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள்
II. "வின்டோஸ்" இயக்க முறைமை
III. கோப்பு முறை
IV. **சொல்முறை வழிப்படுத்தல்**
அடிப்படைத் திறமைகள், திரைக்கு பழக்கப்படல், பாடப்பதிப்பு, பாடங்களை நேர்ப்படுத்தல், எழுத்துரு வகையும் பண்புகளும், பந்தி உள்தள்ளல், வரி வெளிகள் மாற்றுதல், தத்தல் அமைப்பு, பாடத்தைக் கண்டுபிடித்தலும் மாற்றிடுதலும், உச்சரிப்பு மற்றும் இலக்கணம், தேசோரஸ், நிரல்கள், பக்க அமைவு செயற்பாடுகள், ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகள் தயாரித்தல், பாடத்தை வரிசைப்படுத்தல், கோப்பு முகாமை, அஞ்சல் இணைப்பு, "மக்ரோ" தொழிற்பாடு என்பன

V. **விரிதாள்** -
அடிப்படைத் திறமைகள்,
வடிவமைத்தல்,
பதிப்பித்தல்
நிரல்களும் வீச்சும், செருகுதல், நீக்குதல்
தகவல்களை வரிசைப்படுத்தல்
வரைபடங்களைப் படைத்தல்
அச்சிடல்
@பயன்பாடு,
மக்ரோக்களுடன் பணியாற்றல்,
கோப்பு முகாமை என்பன

VI. **இணையம்** - இணையத்தை அறிமுகப்படுத்தல், உலகளாவிய வலையமைப்பு, எவ்வாறு வழி கண்டறிதல் இணையச் செயல்முறை

VII. **மின்னஞ்சல்** - அறிமுகம், அடிப்படைத் திறமைகள், அஞ்சல்களைப் பெறுதல், அனுப்புதல், பதிலளித்தல், இணைப்புகளுடன் செயலாற்றல், புனைப் பெயர்களை உருவாக்கி பயன்படுத்தல், தகவல்களை இயற்றுதல்.

**இவ்வினாத்தாள் பின்வரும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது**
**பகுதி *I*** – பல்விருப்பு/ சுருக்கமான பதில்களை எதிர்பார்க்கும் 40 வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். காலம் - 45 நிமிடங்கள் - ***(40* புள்ளிகள்)**

**பகுதி *II*** – பகுதி அமைவு ரீதியிலான 5 வினாக்கள் - காலம் - 45 நிமிடங்கள் - ***(60* புள்ளிகள்)**

**குறிப்பு:- *2013.12.11*** ஆந் திகதிய ***1840/ 34*** ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பினைத் தழுவித் தயாரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக்குறிப்பின் இணைப்பு 4இன்படி தேசிய பயிலுநர் தொழிநுட்பப் பயிற்சி அதிகாரசபையினால் அளிக்கப்படுகின்ற கணினி நடவடிக்கை உத்தரவுச்சீட்டு சான்றிதழ் பெற்றுள்ள அலுவலர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கணினி தொடர்பான பட்டமொன்றைப் பெற்றுள்ள அலுவலர்கள், மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் NVQ மட்டம் 4 அல்லது அதற்கு மேல் மட்டத்திலான கணினிச் சான்றிதழைப் பெற்றுள்ள அலுவலர்கள் இக்கணினிப் பரீட்சையின் எழுத்துப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

*16.* இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானம் இறுதியானது என்பதுடன் தமிழ் மற்றும் சிங்கள மொழி உரைகளில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

சி.ஏ.மோகன்ராஸ்,
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.